மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 183/2022</u>

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிவாசகம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>03.01.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்குரையில் நான் சொல்லியுள்ள முகவரியில் தான் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் வழக்குரையில் சொல்லி உள்ள பிரதிவாதியின் முகவரியில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தை பொறுத்து நான் விளம்புகை பரிகாரம் எதுவும் வழக்கில் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருந்து வருவதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் என்வசம் இல்லை என்றால் ஆமாம். எனது வீடு நிழலி கிராமத்தில் உள்ளது நான் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு அடிக்கடி செல்வேன். தாவா சொத்தானது வெள்ளகோவில் கிராமம் கரட்டுப்பாளையத்தில் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து அமைந்துள்ள இடத்தின் பெயர் காளிமூப்பன்பதி என்றால் சரிதான். நான் வெள்ளகோவில் பத்திர

எழுத்தர் குணசேகரன் என்பவரிடம் எத்தனை வருடங்களாக வேலை பார்த்தேன் என்றால் நான் அவரிடம் வேலை எதுவும் பார்த்ததில்லை.

2. நான் எஸ் எஸ் எல் சி வரை படித்துள்ளேன். ஆவணங்களை படித்து பார்த்து புரிந்து கொள்ள என்னால் முடியும் என்றால் சரிதான். என் தாயாரின் தகப்பனார் பெயர் நாச்சிமுப்பன் என்றால் சரிதான். அவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் ஆமாம். மூத்த மனைவி பெயர் வள்ளியம்மாள் என்றால் ஆமாம். நாச்சிமுப்பன் என்பவருக்கு மூத்த மனைவி வள்ளியம்மாள் மூலமாக சின்னப்ப நாடார் என்ற ஒரே வாரிசு என்றால் சரிதான். மேற்படி சின்னப்பநாடார் என்பவருக்கும் இரண்டு மனைவிகள் என்றால் ஆமாம். இரண்டு மனைவிகள் பெயரும் பெரியம்மாள் என்றால் சரிதான்.மேற்படி சின்னப்ப நாடார் மற்றும் அவரது மூத்த மனைவி பெரியம்மாள் ஆகியோர்களுக்கு பிரதிவாதி மற்றும் பொன்னுச்சாமி, கண்ணம்மாள், பாப்பாத்தி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் ஆமாம். சின்னப்பநாடாருக்கு அவரின் இளைய மனைவி மூலமாக பாப்பாத்தி என்கிற சரசு மற்றும் சண்முகம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் ஆமாம். சண்முகம் இறந்துவிட்டார் என்றும் அவரது மனைவி பெயர் காமாட்சி என்றும் சொன்னால் சரிதான். சண்முகத்திற்கு நதியா மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் இல்லை மகன் பெயர் சிவபாலன். நாச்சிமுத்துநாடார் என்பவரின் இரண்டாம் மனைவி இராமாயம்மாள் என்பவருக்கு எனது தாயார் வீரம்மாள், பழனிச்சாமி, தங்கமுத்து ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாயாரான வீரம்மாள் மற்றும் என் தகப்பனார் நாச்சிமுத்து ஆகிய இருவரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். என்

தாயார் வீரம்மாள் என்பவருக்கு நானும் கணேசமூர்த்தி, சரோஜினி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தின் பழைய காலை எண் 1184 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 62 சென்ட் என்றால் சரிதான். அதில் ராமாயம்மாள், செங்கோடமூப்பன் மற்றும் வீரமூப்பர் மகன் ராமமூப்பன் ஆகியோரிடம் இருந்து 06.10.1945 ல் 1 ஏக்கர் 20 1/4 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய சொத்தில் தெற்கோடாக மேற்கோட்டில் தெற்கு வாசல் 4 அங்கன வில்லை வீட்டை சேர்த்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதில் கிரையத்தொகை 200 ரூபாய் பேசியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ல் ராமாயம்மாளுக்கு கிரையம் கொடுத்த ராமமூப்பன் மற்றும் செங்கோடமூப்பன் ஆகியோர் ராமாயம்மாள் கணவர் நாச்சிமுப்பன் என்பவருக்கு கிரைய சொத்தை ரூபாய் 300 க்கு போக்கியம் வைத்ததாக கண்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி கிரய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்த ராமமூப்பன் என்பவரின் தகப்பனார் பெயர் வீரமூப்பன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் வீரமூப்பன் என்பவர் அடமானம் வைத்த தொகையில் ஒரு பகுதியை செலுத்தி விட்டு மீதி அடமான தொகையை கிரையம் பெற்ற ராமாயம்மாள் அவரது கணவர் நாச்சிமூப்பன் என்பவருக்கு செலுத்தி விட்டு ராமாயம்மாள் கிரைய சொத்தை சுவாதீனம் பெற்றுக்கொள்ள வேண்டியது என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமாயம்மாள் தனது கணவர் நாச்சிமூப்பன் என்பவருக்கு அடமான தொகையை செலுத்தி விட்டார் என்பதற்கான ரசீதுகள் ஏதேனும் எங்கள் வசம் உள்ளதா என்றால்

இல்லை. நாச்சிமூப்பன் என்பவரும் எனது தாய் வழி பாட்டி ராமாயம்மாள் என்பவரும் தான் தாவா சொத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

4. ராமாயம்மாள் மற்றும் நாச்சிமூப்பன் ஆகியோர்கள் தான் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தாயார் வீரம்மாள் கரூர் மாவட்டம் கூடலூர் கீழ்பாக கிராமம் மலைச்சியூரில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் தாவா சொத்தில் குடியிருந்து வந்ததற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. என் தாயார் தாவா சொத்தில் குடியிருந்து வந்ததற்கான ஆவணங்கள் என் வசம் இல்லை என்றால் ஆமாம். 1968 ஆம் வருடத்திய செட்டில்மென்ட் ஆவணமான வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை பொறுத்து என் தாயார் பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் தெற்கோட்டில் மேற்கோட்டில் உள்ள வீட்டை பொறுத்து என் தாயார் பெயரில் வரி ரசீதுகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்தை பொறுத்து என் தாயார் பெயரில் கந்தாய ரசீதுகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தை பொறுத்து என் தாயார் பெயரில் ஏற்பட்ட கந்தாய ரசீதுகள் எதுவும் என் வசம் இல்லை என்றால் ஆமாம். என் தாயார் மலைச்சியூர் கிராமத்தில் இருந்து தாராபுரம் வடுகப்பட்டி போகும் வழியில் உள்ள காளியம்மன் ஆயில் மில்லில் சிறிது காலம் வசித்தார் என்றால் ஆமாம் என் தகப்பனார் காவல்துறையில் பணிபுரிந்து வந்ததால் அவர் பணி மாறுதல் பெற்று செல்லும் இடங்களுக்கு எல்லாம் என் தாயாரும்

சென்று வசித்து வந்தார். தாவா சொத்தில் என் தாயார் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல குடியிருந்து வந்தார்.

5. தாவா சொத்தில் என் தாயார் குடியிருந்து வந்ததற்கு ஆதாரங்கள் எதுவும் என் வசம் இல்லை என்றால் ஆமாம். வழக்கிற்காக என் தாயார் தாவா சொத்தில் குடியிருந்து வந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2010–ம் ஆண்டு வாக்கில் என் தாயார் என்னுடன் நிழலி கிராமம் வஞ்சிபாளையம் கிணத்துக்காட்டு தோட்டத்தில் என்னுடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆன செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில் என் தாயார் தாவா சொத்தை பொறுத்து அவர் பெயரிலான வரி ரசீதுகள் அனைத்தையும் என்னிடம் கொடுத்து தாவா சொத்தை என்னிடம் சுவாதீனம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல சுவாதீனம் கொடுத்தார். தாவா சொத்தை என் தாயார் ஒரு காலத்திலும் சுவாதீனத்திலிருந்து அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து என் தாயார் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வெள்ளகோவில் கிராமம் பட்டா எண் 3976 ஆன சிட்டாவில் எனது தாயார் வீரம்மாள் மற்றும் சின்னப்பநாடார், பழனிச்சாமி நாடார் ஆகியோர்கள் பெயர்கள் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி சிட்டா பி.வா.சாஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பின்னிட்டு எனது பெயரிலான செட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து தாவா சொத்திற்கான பட்டாவை எனது பெயருக்கு மாற்றிக் கொண்டுள்ளேன் என்றால் ஆமாம் அந்த பட்டா வா.சா.ஆ.6 ஆவணமாக குறியீடு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி பி.வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.6 ஆன இரண்டு பட்டாக்களை பொறுத்தும் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது என்றால் சரிதான். வழக்குரையில் தாவா சொத்தின் ரீசர்வே எண் 1184/14 என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தானது 1184 /14 ஏ பி சி டி இ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் டி என உட்பிரிவு செய்யப்படவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டு தான் வா.சா.ஆ.6 ஆன பட்டாவை எனது பெயருக்கு மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல அதற்கு முன்பே மாற்றி விட்டேன். 06.10.2020 வரை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தவா சொத்து எனது பெயருக்கு மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

7. வழக்குரையில் தாவா சொத்தின் விஸ்தீரனமாக பு.ெஹ 0.44 ஹெக்டர் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அது ஏக்கரில் 1 ஏக்கர் 9 சென்ட் என்றால் சரிதான். வழக்குரை சொத்து விபரத்தில் உட்பிரிவு விவரங்கள் குறிப்பிடப்படாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் புஞ்சை ெஹக்டர் 43.25 Ars நிலத்திற்கு மட்டும் தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வா.சா.ஆ.6 பட்டா கட்டுப்படாது என்றால் ஆமாம். புல எண்.1184/14d நிலத்திற்கு பிரதிவாதியின் தகப்பனார் சின்னப்பநாடார் என்பவர் பெயருக்கு 21.01.1997 ம் தேதியில் மனை வரி தோராய பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள வீடு கிழக்கு பார்த்து உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள

வீட்டில் விசைத்தறி குடோன் உள்ளது என்றால் ஆமாம். அதன் மின் இணைப்பு எண்.1531 மற்றும் 957 என்றால் சரிதான். அந்த வீட்டின் கதவு எண்.1. வழக்குரை சொத்து விபரத்தில் நான் தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வீட்டு வரி ரசீதை கொடுத்துள்ளேன்.வா.சா.ஆ.8 ஆன சொத்து வரி ரசீது ஆனது வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புகளை வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு தான் எனது பெயரில் நான் மாற்றம் செய்தேன் என்றால் ஆமாம்.

8. 2010 ஆம் ஆண்டு எனது பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதற்கு பின்பு வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்தில் உள்ள வீட்டின் வீட்டு வரி மற்றும் மின் இணைப்புகளை எனது பெயரில் நான் மாற்ற நான் விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து என்று தாயாருக்கே சுவாதீனம் கொடுக்கப்படாத நிலையில் வா.சா.ஆ.3 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து எனக்கு சுவாதீனம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் அதில் கண்டுள்ள சொத்தைப் பொறுத்து இதுவரை உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்தின் சுவாதீனம் பிரதிவாதி வசம்தான் உள்ளது என்றும் தாவா சொத்தை வரிவகைகள் செலுத்தி பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றும் தாவா சொத்து எனது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இல்லை என்றும்

சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ள பழனிச்சாமி எனக்கு என்ன உறவு முறை என்றால் மாமா உறவு. மேற்படி பழனிச்சாமி தாவா சொத்தை பொறுத்து காங்கேயம் சார்பு நீதிமன்றத்தில் எனது தாயாரையும் தரப்பினராக சேர்த்து அசல் வழக்கு எண். 243/2018 என்ற வழக்கை தாக்கல் செய்து நடைபெற்று வந்தது என்றால் சரிதான். அதில் எனது தாத்தா நாச்சிமுத்துமூப்பன் என்பவரின் 2 மனைவிகளின் வாரிசுகளையும் அந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருந்தார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் தாவா சொத்து பொது அனுபவத்தில் இருப்பதாக பழனிச்சாமி காட்டி இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் பெயரளவில் ஏற்பட்ட ஆவணங்கள் என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்தின் சுவாதீனம் எனக்கோ என் தாயாருக்கோ வழங்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் சுவாதீனத்திலிருந்து பிரதிவாதி அனுபவம் செய்து வருவதை இடைஞ்சல் செய்யும் வகையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்டது சம்பந்தமாக நான் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடிக்கு தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.01.03 18:47:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்